10-50 மணி

4. விதி 111-ன் கீழ் அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. அன்பில் பொய்யாமொழி அவர்களின் துணைக் கேள்விக்கு அளித்த பதிலில் திருத்தப்படவேண்டிய பகுதி :

''ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து பக்கத்தில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். குறைந்த பட்சம் அந்த ஊரிலிருக்கிற மக்கள் 5 ஏக்கர் நிலமும் ரூ. 10,000 பணமும் தருவார்களானால் அதைப் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்படுகிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த ஆண்டில் 30 ஆயிரம் மக்களுக்கு ஒன்று அடிப்படையில், 174 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.''

திருத்திய பகுதி :

''ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து பக்கத்திலிருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். குறைந்த பட்சம் அந்த ஊரிலிருக்கிற மக்கள் 5 ஏக்கர் நிலமும், ரூ. 10,000 பணமும் தருவார்களானால் அதைப் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்டுகிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த ஆண்டில் 30,000 மக்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் 164 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.''

5. கவன ஈர்ப்பு.

கடானா நீர்த்தேக்க விரிவாக்கத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''366 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆய்வு செய்யப்

[திரு. கே. ரவி அருணன்]

பட்டுள்ளகடானா நீர்த்தேக்க விரிவாக்கத் திட்டத்தைஉடனடியாக நிறைவேற்ற வேண்டியது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கடனா நீர்த்தேக்கத் திட்டத்தின்கீழ் சுமார் 20 குளங்கள் பயன்பெற்று சுமார் 357 ஏக்கர் பாசன வசதி பெற, ரூ. 3.66 கோடி செலவில், வலதுபுற கால்வாய் விஸ்தரிப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் குறித்து பொதுப்பணித் துறையால் ஒரு முன்னோடி அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆய்வில் உள்ளது. விரிவான ஆய்வுக்குப் பின் இதற்கான திட்ட மதிப்பீடு இறுதியாக்கப்படும். திட்ட மதிப்பீடு இறுதியாக்கும் பணி தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்ட மதிப்பீடு அரசுக்கு கிடைத்த பின் நிதிநிலைக்கேற்ப பரிசிலனை செய்து திட்டத்தின்மீது முடிவெடுக்கப்படும்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடனா நீர்த்தேக்கமானது முன்பு ராமநதி மற்றும் கடனா நதி ஆகிய நதிகளை இணைத்து, ஒரு பெரிய அணைக் கட்டுத் திட்டமாகக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் அந்த அணைக்கட்டுத் திட்டம், ராமநதி நீர்த்தேக்கம் என்றும், கடனா நதி நீர்த்தேக்கம் என்றும் இரண்டு சிறிய நீர்த் தேக்கங்களாக ஏற்படுத்தப்பட்டதால், அந்த நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு மிகச் சிறியதாக ஆகிவிட்டது. அதனால் அந்தப் பகுதியில் இருக்கிற பாசன விவசாயிகள், அந்த நீர்த்தேக்கம் நிரம்பினாலும் கூட ஒரு உறுதியற்ற முறையிலும் தயக்கத்துடனும் சாகுபடியை மேற்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். ஆகவே கடனா நீர்த்தேக்க விஸ்தரிப்புத் திட்டத்தை உடனடியாக விரிவாக ஆய்வு செய்து, அதை அடுத்த நிதியாண்டிலாவது செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கடனா நீர்த் தேக்கத் திட்டம் 1974-ல் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. இது தாமிரபரணியினுடைய உப நதி

கவன ஈர்ப்பு

[திரு. துரைமுருகன்]

இந்த அணையின் மூலமாக சுமார் 8,605 ஏக்கர் நிலங்கள் பயிர் சாகுபடியைப் பெறுகின்றன. அதனுடைய வலது புறக் கால்வாயை விஸ்தரிப்பு செய்தால் மேலும் 20 குளங்களுக்கு பாசன வசதி அளிக்க முடியும் என்று அரசு ஒரு திட்டத்தை மேற் கொண்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவன மெல்லாம் புளியங்குளத்தின் பக்கத்தில் உண்டு என்று எனக்குத் தெரியும். கழுதைப்புலிக் குளத்திற்குப் பக்கத்தில் இருக்கிற அந்த புளியங்குளத்திற்கும் சேர்த்து 20 குளங்களுக்குப் பயன் தரத்தக்க வகையில்தான் ரூ. 366 லட்சத்தில் ஒரு விரிவாக்கத் திட்டத்தை அரசு ஆய்ந்திருக்கிறது. திட்டம் தீட்டி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது அரசின் ஆய்வில் இருக்கிறது. அது முடிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

இரண்டாவது, உப நதிகளிலும் வருகிற தண்ணீரை முழு வதும் தேக்கி நிறுத்த மாட்டார்கள். அப்படியானால் அதனுடைய மெயின் ஆற்றில் பாசனம் அற்றுப் போய்விடும். அது சட்டப் படியும் குற்றம். எனவே, அந்த அளவுக்குக் கொள்ளளவை வைத்து அந்த அணை கட்டப்பட்டிருக்கிறது.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் ஒரே வாரத்தில் அந்த அணை நிரம்பி, உபரி நீர் வழிந்து கடலில் சென்றுவிடுவதை நாங்கள் பத்து ஆண்டுக் காலமாகக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு வருகிறோம். அமைச்சர் அவர்கள் கூறியுள்ள விவர அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள 20 குளங்கள் எவையெவை என்பதையும், அந்த வலது புறக் கால்வாய் விஸ்தரிப்புத் திட்டம் என்றால் என்ன என்பதை யும், இருக்கிற நீர்த்தேக்கத் திட்டம் விரிவுபடுத்தப்பட இருக் கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : இருக்கிற நீர்த்தேக்கத் திட்டத்தை விரிவுபடுத்துவது என்பதல்ல இந்தத் திட்டம். அணையின் வலதுபுறக் கால்வாயை மட்டும் தான் விரிவுபடுத்து கிற திட்டம். அதைத்தான் நான் சொன்னேன். அது தாமிர பரணியின் கிளை நதி. கிளை நதியிலிருந்து வருகிற நீரை முழு வதுமே தடுத்து நிறுத்திவிட்டால், தாமிரபரணி என்ற ஜீவநதி வறண்டு போய்விடும். அது சட்டப்படியும் முடியாது. ஆகவே தான் ஓரளவுக்கு தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்களைப் போல பலர் வற்புறுத்துகின்ற காரணத்தால், அதனுடைய வலது புறக் கால்வாயை மட்டும் விஸ்தரித்து அதன் மூலமாக 20 குளங்களுக்கு பாசன வசதி அளிக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதனுடைய அறிக்கை அரசின் ஆய்வில் இருக்கிறது.